# அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - நோர்வே
# அன்னைத் தமிழ்முற்றப் போட்டி 25/26

2015 பிறந்தவர்கள் பின்வரும் 5 குறள்களை மட்டும் ஒப்பித்தல் செய்தல். குறள்களுக்கான பொருள் விளக்கம் கூறத்தேவையில்லை.

1. **கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
   **மாடல்ல மற்றை யவை.** (குறள் 400)

   அழிவு இல்லாத நிலையான செல்வம் கல்வி. அதை விடச் சிறந்த செல்வம் வேறு எதுவும் இல்லை.

2. **ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
   **உயிரினும் ஓம்பப் படும்.** (குறள் 131)

   ஒழுக்கம் மேன்மையைத் தருவதால், உயிரினும் மேலானதாக ஒழுக்கத்தைப் பேணல் வேண்டும்.

3. **அழுக்காறு உடையான்கண் ஆக்கம்போன் றில்லை**
   **ஒழுக்கம் இலான்கண் உயர்வு.** (குறள் 135)

   பொறாமை உடையவனிடம் செல்வம் சேர்வதில்லை. அதுபோல, ஒழுக்கம் இல்லாதவனிடத்து உயர்வு இல்லை.

4. **முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து**
   **அகநக நட்பது நட்பு.** (குறள் 786)

   ஒருவருடன் முகம் மட்டும் மலரும் வகையில் நட்புக் கொள்வது நட்பன்று. உள்ளமும் மலர நட்புக் கொள்வதே நட்பாகும்.

5. **ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
   **எழுமையும் ஏமாப் புடைத்து** (குறள் 398)

   ஒரு பிறப்பில் தான் கற்ற கல்வியானது அப்பிறப்பிற்கு மட்டும் அல்லாமல் ஒருவனுக்கு ஏழு பிறப்பிலும் உதவும் தன்மையுடையது.

**வளாகங்களில் முதல் மூன்று நிலைகளையும் அடைந்த மாணவர்கள் அன்னைத் தமிழ்முற்றப் போட்டியில் பங்குபெறும் வாய்ப்பைப் பெறுவார்கள்.**

அனைத்து மாணவர்களுக்கும் இப்பிரதி வழங்கப்படுகிறது.மாணவர்களை ஊக்கப்படுத்துவது ஆசிரியர் கடமை. மாணவர்களை தயார்ப்படுத்துவது பெற்றோரினது கடமை